**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 93** **நாள்: 01.08.2017**

## பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை சார்பில் மத்திய சிறைச்சாலையில் கைதிகளுக்கு சுகாதார விழிப்புணர்வு முகாம் மற்றும் காசநோய் பரிசோதனை நடத்தப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பாக சென்னை மத்திய சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு சுகாதார விழிப்புணர்வு குறித்தும், காசநோய் பரிசோதனையும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் உத்தரவின்படி நடத்தப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதார கல்வித்துறையின் சார்பில் பல்வேறு விதமான நோய்த்தடுப்பு விழிப்புணர்வு முகாம்கள் சென்னை மாநகர் முழுவதும் நடத்தப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில், சென்னை மத்திய சிறைச்சாலையில் உள்ள விசாரணை மற்றும் தண்டனை கைதிகளுக்கு நோய்த்தடுப்பு குறித்த விழிப்புணர்வும், காசநோய் அறிகுறிகள் உள்ளதா என்பது குறித்த பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது.

திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சியின் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், காசநோய் அறிகுறிகள் உள்ள நோயாளிகள் சளிப் பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு தொடர்ந்து ஆறு மாத காலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது. முறையாக மருந்துகள் உட்கொள்கிறார்களா என்று அவர்கள் வசிக்கும் பகுதிக்குரிய சுகாதாரத்துறையினரால் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறார்கள். மேலும், காசநோய் களப்பணியாளர்கள் மூலம் குடிசைப்பகுதிகளில் வீடு வீடாக பரிசோதனை செய்து, காசநோய் அறிகுறிகள் யாருக்கேனும் உள்ளதா என்று கண்டறிந்து, உரிய சிகிச்சை அளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து, சென்னை புழலில் உள்ள மத்திய சிறைச்சாலையில் சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை சார்பாக சுகாதார கல்வி அலுவலர், காசநோய் திட்ட அலுவலர் மற்றும் 25 காசநோய் களப்பணியாளர்கள் கொண்ட குழுவினரால் 1700 விசாரணை கைதிகள், 600 தண்டனை கைதிகளுக்கு நோய்கள் எவ்வாறு உருவாகின்றன, அவற்றை தடுக்கும் முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. முறையாக சோப்பு உபயோகித்து கை கழுவுவதன் மூலம் பல தொற்று நோய்கள் வராமல் தடுக்க முடியும் என்பதை பற்றி எடுத்துக் கூறி, கைகழுவும் முறை குறித்து செய்முறை பயிற்சியும் அளிக்கப்பட்டது. மேலும், கைதிகள் அனைவருக்கும் பிளாக் வாரியாக ஒவ்வொரு இடத்திலும் இவ்விழிப்புணர்வு முகாம்

நடத்தப்பட்டது. கை கழுவும் முறைக்கான படத்துடன் கூடிய ஸ்டிக்கர்கள் அனைத்து சிறை பிளாக்குகளிலும் விழிப்புணர்வுக்காக ஒட்டப்பட்டுள்ளன.

பின்னர், காசநோயின் பொதுவான அறிகுறிகளான மாலை நேரக் காய்ச்சல், இரண்டு வாரம் தொடர்ந்து இருமல், சளியில் இரத்தம் கலந்து வருதல், பசியின்மை, எடை குறைவு போன்ற அறிகுறிகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தி, அவ்வாறு அறிகுறிகள் உள்ளவர்கள் சளிப் பரிசோதனை செய்ய, மாதிரிகள் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன் பேரில், 183 பேர் சளிப் பரிசோதனைக்காக மாதிரிகள் அளித்தனர். அதனை, மாநகராட்சி காசநோய் ஆய்வுக் கூடத்தில் பரிசோதனை செய்ததில், ஒருவருக்கு மட்டும் காசநோய் இருப்பது கண்டறியப்பட்டது. அவருக்கு சிறைச்சாலையில் உள்ள மருத்துவ அலுவலர் மூலமாக உடனடியாக சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**